கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

தேனீ 10 வருடங்கள் 22.02.2001 - 22.02.2011

Online Newspaper in Tamil Vol.10 03.03.2013

முதற்பக்கம்
யாழ்மாநகரசபை
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
நெருப்பு
புளொட்
தூ
டெலோ நியூஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
சூத்திரம்
மகாவலி
உண்மைகள்
கவிமலர்
கிருத்தியம்
அலை
பூந்தளிர்
எங்கள்தேசம்
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
தமிழ்யுகே
புயல்
யாழமுஸ்லீம்
புண்ணியாமீன்
யவ்னா ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்
யாழ்மண்
தமிழ்குரல்
துருவம்
தினசரி
இலங்கை முஸ்லீம்
ஆயுள்
ஆறாம் அறிவு
எதுவரை
அறிக்கை நியூஸ்
தாய் நாடு
அதிரடி
சுபீட்சம்
காத்தான்குடி இன்போ
ARRR
Asientribune
The lka academic
Tamil Week
The Hindu
Daily News
Sunday Times
Daily Mirror
The island
The Sunday Leader
ColomboPage
Sunday Times
CNN
BBC
Newsnow

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் (87)

### 87.உலகம் இவர்களுக்காகவும் கொஞ்சம் கண்ணீர் வடிக்காதா?


Rajini Thiranagama

எனது விசாரணை மீண்டும் சூடு பிடிக்கத் தொடங்கியது. புலிகளின் புலனாய்வாளர்களில் ஒரு வழமை இருக்கிறது. ஒருவரை விசாரணை செய்யும் பொழுது பல விதமான தந்திரங்களைக் கையாளுவார்கள். விசாரணையின் ஒரு கட்டத்தில் விசாரணையின் பெரும்பகுதி முடிந்தது போல ஒரு போக்குக் காட்டுவார்கள். சில நாட்கள் விசாரணைக்குக் கூப்பிடாமல் வதை முகாமுக்குள் சற்று ஓய்வாக இருக்க விடுவார்கள். பின்னர் திடீரென்று கூப்பிட்டு எதிர்பாராத பல கேள்விகளைக் கேட்பார்கள்.

அதற்குப் பல காரணங்கள் இருக்கும். ஒன்று புலிகளது வெளிக்களப் புலனாய்வாளர்கள் தாம் பிடித்து வைத்திருக்கும் நபர் சம்பந்தமாக ஏதாவது மேலதிக தகவல்களைத் திரட்டி அனுப்பியிருப்பார்கள். அல்லது அந்நபருடன் தொடர்புடைய வேறு சிலர் கடத்தப்பட்டு, அவர்கள் தமது விசாரணையின் போது ஏதாவது புதிய தகவல்களை வழங்கியிருப்பார்கள். அல்லது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருப்பவர் வதை முகாமுக்குள் உள்ள புலிகளின் உளவாளிகளை நம்பி ஏதாவது உளறிக் கொட்டியிருப்பார்.

அதன் காரணமாக மீண்டும் ஆரம்பமாகும் விசாரணைதான் 'உண்மையானதாகவும் மிகவும் கடுமையானதாகவும் இருக்கும். சித்திரவதைகளும் மிக மோசமாக இருக்கும். எனது விசாரணையும் அப்படி ஒரு கட்டத்தை அடைவது போலத் தோன்றியது.

எனது விசாரணையாளன் தயாபரன் சிறிது தொய்வுவிட்டு மீண்டும் எனது விசாரணையை ஆரம்பித்தான். அவன் இம்முறை குறிப்பாக இரண்டு கேள்விகளைத் தொடுத்தான். ஒரு கேள்வி, நான் எப்பொழுது கடைசியாகக் கொழும்பு சென்று வந்தேன் என்பது. மற்றைய கேள்வி, யாழ்.பல்கலைக்கழக கணித விரிவுரையாளர் கே.சிறீதரன் அவர்களை எப்பொழுது கடைசியாகச் சந்தித்தேன் என்பதாகும். இந்த இரண்டாவது கேள்விக்கு ஏற்கெனவே நான் பதில் சொல்லியிருந்தேன்.

மனித உரிமைகளுக்கான யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வெளியிட்ட 'முறிந்த பனை' என்ற நூலின் நான்கு ஆசிரியர்களில் ஒருவரான வைத்தியக் கலாநிதி ராஜினி திராணகம அவர்களைப் புலிகள் சுட்டுப் படுகொலை செய்த பின்னர், மற்றைய மூவருக்கும் புலிகள் வலை விரித்திருந்தனர். அவர்களில் கலாநிதி கே.சிறிதரன் தவிர, மற்றைய இருவரும் யாழ்ப்பாணத்தில் அந்தச் சமயத்தில் இருக்கவில்லை. சிறீதரனும் புலிகளின் கொலை அச்சுறுத்தல் காரணமாகத் தலைமறைவாகவே இருந்தார்.

புலிகள் சிறீதரனை விடுத்துவிட்டு முதலில் ராஜினியைக் கொலை செய்ததிற்கு ஒரு காரணம் இருந்தது. ராஜினி 'முறிந்த பனை'யின் ஆசிரியர்களில் ஒருவர் மட்டுமல்ல. அவர் இலண்டனில் இருந்த காலத்தில் அவர்தான் அங்கு புலிகள் இயக்கம் வேரூன்றுவதற்கான அத்திபாரத்தை இட்டவர். அவர் தமிழ் மக்களின் பிரச்சினைக்காகத்தான் புலிகள் போராடுகிறார்கள் என விசுவாசித்தே புலிகளுடன் இணைந்து வேலை செய்தார். ஆனால் அப்படியில்லை, புலிகளுக்கு தமிழ் மக்களின் பிரச்சினையை விட, தமது சொந்த அரசியல் அதிகாரத்தை - அதுவும் பிராபாகரன் என்ற ஒரு தனி மனிதனின் சர்வ அதிகாரத்தை நிலைநாட்டும் - நிகழ்ச்சி நிரல்தான் முதன்மையில் இருக்கிறது என்பதையும், அதற்காக புலிகள் மிகவும் மோசமான பாசிச நடைமுறைகளைக் கையாள்கிறார்கள் என்பதையும் அறிந்ததும், அவர் புலிகளை விட்டு விலகிக் கொண்டார்.

அதன் காரணமாக புலிகளுக்கும் அவருக்கும் தகராறு ஆரம்பித்துவிட்டது. இந்தத் தகராறில் புலிகளின் அரசியல் ஞானசூனியமான அன்ரன் பாலசிங்கத்துக்கும் முக்கிய பங்குண்டு. அன்ரன் பாலசிங்கம் ஆரம்ப காலத்தில் சமசமாஜக் கட்சிக்குப் பின்னால் திரிந்த ஒரு ரொட்ஸ்கியவாதி. பின்னர் கொழும்பிலிருந்து வெளியாகும் 'வீரகேசரி'யிலும், பிரிட்டிஸ் கவுன்சில் அலுவலகத்திலும் வேலை செய்த பொழுது முற்றிலுமாக ஒரு பிழைப்புவாதியாக மாற்றம் அடைந்துவிட்டார். புலிகள் இயக்கத்தில் நிலவிய அரசியல் வரட்சியையும், பிரபாகரனின் அசகாய சூரத்தனத்தையும் பயன்படுத்திக்கொண்டு, அதற்குள் நுழைந்து தன் அபிலாசைகளை இறுதிவரை ஈடேற்றிக் கொண்டார். அப்படியான ஒருவருக்கு ராஜினி போன்ற ஒருவர் புலிகள் இயக்கத்தில் இருந்தால் இடையூறு என்பதைப் புரிந்து கொண்டார்.

இலண்டனில் இருந்து இலங்கை திரும்பிய ராஜினி, யாழ் பல்கலைக்கழகத்து மருத்துவ பீடத்தில் உடல் கூற்றியல் பேராசிரியை என்ற தனது தொழிலுடன் நின்று விடுவார் என்றே புலிகள் ஆரம்பத்தில் எதிர்பார்த்தனர். அவர் யாழ்ப்பாணம் வந்த ஏறத்தாழ அதே காலகட்டத்தில்தான், சிறீதரனும் தனது கலாநிதிப் பட்டப் படிப்பை பிரித்தானியாவில் முடித்துக் கொண்டு இலங்கை திரும்பினார். பேராதனையில் படிக்கும் காலத்தில் சிறீதரனுக்கு இடதுசாரி இயக்கத்துடன் சில தொடர்புகள் இருந்ததால், அவரும் தமிழ் மக்களின் பிரச்சினை சம்பந்தமாக ஏதாவது உருப்படியாகச் செய்ய வேண்டும் என்ற கருத்துடன் இருந்தார். காந்தீய நெறிமுறைகளில் ஈடுபாடு கொண்ட ராஜன் கூல் அவர்களும் இவர்களுடன் சேர்ந்து கொள்ள, யாழ் பல்கலைக்கழகத்தில் மனித உரிமை அமைப்பொன்றை உருவாக்கி வேலை செய்ய ஆரம்பித்தனர்.

இந்த பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமிழ் மக்களுக்காகப் பாடுபடுவது என்பதை குறுகிய இனவாத



Yarl TV Live
புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர்
சிங்களவர்கள் ஆகிய நாங்கள்
யாழ்ப்பாணத்தின் அவலம்!
சொல்ல மறந்த கதை:
ராஜீவ் கொலையாளிகளின் குற்றப் பின்னணி!
தமிழ் மக்கள் இழந்து வரும் சந்தர்ப்பங்கள்
ஜயசேனவும் ராஜகுலேந்திரனும்

Thendral Radio

அடிப்படையில் நோக்கவில்லை. சிங்களப் பேரினவாத சக்திகள் தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்துவிட்ட தேசிய ஒடுக்குமுறையை எதிர்த்த அதேநேரத்தில், அவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் இருந்தும் 'விடுதலைவாதிகள்' என்ற பெயரில் புதிய ஒடுக்குமுறையாளர்கள் தோன்றுவதை எதிர்த்தனர். அத்துடன் மத்தியஸ்தர்கள் என்ற போர்வையில் இந்தியா தனது விஸ்தரிப்புவாத நோக்கங்களுக்கு தமிழ் மக்களைப் பகடைக் காய்களாக்குவதையும் எதிர்த்தனர். அதன் காரணமாகவே அவர்களது 'முறிந்த பனை' இலங்கை, இந்திய இராணுவங்களின் மக்கள் விரோதச் செயல்பாடுகளையும், அதேவேளையில் தமிழ் 'விடுதலை' இயக்கங்களின் (குறிப்பாக புலிகளின்) அம்பலப்படுத்தியது.

இந்த விமர்சனங்களை இலங்கை - இந்திய அரசுகள் பெரிதாக எடுத்துக் கொண்டதாகத் தெரியவில்லை. ஏனெனில் இந்தியாவில் காஸ்மீர் பிரச்சினை, தெலுங்கானாப் போராட்டம், நக்சலைட் எழுச்சி, வட கிழக்கு மாநில மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டம் என்பனவற்றில் நேருவின் அரசாங்கம் முதல் அவரது மகள் இந்திராகாந்தி, பேரன் ராஜீவ் காந்தி வரையிலான அரசுகளின் இராணுவங்கள் இழைத்த கொடுமைகள் சம்பந்தமாக நூற்றுக்கணக்கான நூல்கள் இந்தியாவில் வெளியிடப்பட்டிருந்தும், அதை எழுதியவர்கள் மீதோ அல்லது வெளியிட்டவர்கள் மீதோ இந்திய அரசுகள் பெரிதாக நடவடிக்கை எதனையும் எடுக்கவில்லை.

ஏனெனில் நடவடிக்கை எடுத்தால், சுதந்திரப் போராட்டப் பாரம்பரியமும், ஜனநாயகப் போராட்ட வரலாறும் கொண்ட இந்திய மக்கள் அதற்கெதிராகக் கிளர்ந்தெழுவார்கள் என்பது அதிகார வர்க்கத்துக்குத் தெரியும். அத்துடன் இந்திய அரசு தன்னைப் பற்றிப் பெரிதாகப் பீற்றிக் கொள்ளும் ஜனநாயக விழுமியங்களில் ஒன்றான கருத்துச் சுதந்திரத்தை மதிப்பதாகக் காட்டும் தேவையும் இந்திய அரசுக்கு உண்டு.

இலங்கையிலும் இரண்டு முறை அரங்கேற்றப்பட்ட ஜே.வி.பியின் ஆயுதக் கிளர்ச்சியின் போது, இலங்கை அரச படைகள் நடாத்திய அட்டூழியங்கள் குறித்து பல நூல்கள் வந்திருந்தும் அவற்றை இலங்கை அரசு தடை செய்யப்படவில்லை.

ஆனால் ஜனநாயக சுதந்திரங்கள் எதையும் மதிக்காத புலிகள் நடாத்திய 'விடுதலைப் போராட்டம்' குறித்து யாராவது கேள்வி எழுப்பினால், புலிகள் என்ன காரணம் கொண்டும் அதைப் பொறுத்துக் கொள்ளமாட்டார்கள். அதுவும் தம்முடன் இருந்த ராஜினி திராணகம போன்றவர்கள் அவ்வாறு நடந்து கொண்டால், அவர்களுக்கு மீட்சியே இல்லை.

அதற்காகவே 'மேதகு தலைவர்' பிரபாகரன் சில தத்துவ முத்துக்களையும் உதிர்த்து வைத்திருக்கிறார். அதாவது பிரபாகரனின் தத்துவப்படி 'எதிரிகளைவிடத் துரோகிகளே மிக ஆபத்தானவர்கள். எனவே முதலில் துரோகிகள் ஒழித்துக் கட்டப்பட வேண்டும்.' எனவேதான் புலிகள் துரோகியான ராஜினியை முதலில் ஒழித்துக்கட்டிவிட்டு, அடுத்ததாக எதிரியான சிறீதரனைத் தேடத் தொடங்கினர். உலகில் தோன்றிய உண்மையான விடுதலை இயக்கங்கள் எல்லாமே, தமக்குள் இருந்த சிறிய சிறிய வேறுபாடுகளை மறந்து, பொது எதிரியை குறி வைத்துத் தாக்கி அழித்து, வெற்றிவாகை சூடியிருக்கையில், விடுதலைப் புலிகள் என்ற தமிழர்களின் விடுதலை இயக்கம் மட்டும், தனது மக்களையே துரோகிகளாகவும் எதிரிகளாகவும் ஆக்கி தனது நரபலி வேட்டையை நடாத்தியது. தலைமை அழிந்தாலும், வால்கள் தொடர்ந்தும் அதையே செய்ய விரும்புகின்றனர்.

புலிகள் ராஜினியைக் கொலை செய்வதற்கு மிகவும் கீழ்த்தரமான, கோழைத்தனமான வழி முறையைக் கைக்கொண்டனர். அவரது நடமாட்டங்களை அவதானிப்பதற்காக சில மருத்துவ பீட மாணவர்களையும், அங்கு பணி புரிந்த பாதுகாப்பு ஊழியர் ஒருவரையும் உளவு வேலைகளில் ஈடுபடுத்தினர். தன்னையொத்த மற்றவர்களைப் போல், ஒரு சுகபோக வாழ்வைத் தேடாமல், கொடுமையான யுத்தம் நிகழ்ந்து கொண்டிருந்த காலத்தில், தான் படித்த படிப்பு தனது மக்களுக்குப் பயன்பட வேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக, இலண்டன் வாழ்வைத் துறந்து தாயகம் மீண்டு, சேவை புரிந்த ஒருவருக்கு புலிகள் கொடுத்த பரிசு இறுதியில் துப்பாக்கி ரவைகளும் மரணமும்தான்.

அவரிடம் கற்று, அவரது உயிருக்கே உலை வைக்க உதவிய அந்த மாணவர்களில் (உண்மையில் இவர்கள்தான் துரோகிகள் என அழைக்கப்பட வேண்டியவர்கள்) சிலர் இலண்டனிலும், வேறு இடங்களிலும் சொகுசாக வாழ்ந்தாலும், அவர்களது ஆன்மா அவர்களைச் சர்வசதா கொன்று கொண்டேயிருக்கும் என்பது நிச்சயம். அவர்களில் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த ஒருவர், சில காலம் வெளிநாடுகளில் தங்கியிருந்துவிட்டு, நான் யாழ்ப்பாணத்தை விட்டு 1999ஆம் ஆண்டு வெளியேறுவதற்கு சில நாட்கள் முன்னர், என்னிடம் வந்து தான் கஸ்டத்தில் இருப்பதாகக் கூறி, பண உதவி செய்யும்படி கோரி, என்னிடம் உளவறியவும் முயன்றார். ராஜினியைக் கொல்வதற்கு உளவு பார்ப்பதில் உதவிய அந்த மருத்துவ பீட பாதுகாப்பு ஊழியர் மனநலம் பாதிக்கப்பட்டு, பல்கலைக்கழகத் தொழிலையும் இழந்து நிற்பதாகச் சமீபத்தில் கேள்வியுற்றேன்.

தன்னந்தனியனாக சைக்கிளில் திருநெல்வேலிச் சந்திக்கு அருகாமையில் இருந்த தனது வீட்டை நோக்கி வந்து கொண்டிருக்கையில், தெருவில் வைத்து ராஜினியை புலிகள் கோழைத்தனமாகச் சுட்டுக் கொன்றனர். இப்படுகொலையை செய்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் புலிகளின் புலனாய்வுப் பொறுப்பாளர்களில் ஒருவனான பொஸ்கோ மற்றும் செங்கதிர் என்பவர்களும் இன்று உயிருடன் இல்லை. பொஸ்கோ நான் புலிகளின் சிறையில் இருக்கையில் அடிக்கடி வந்து என்னை விசாரித்தவன்.

செங்கதிர் தாண்டிக்குளத்தில் இருந்த புலிகளின் முன்னரங்க நிலைகளைப் பார்வையிடச் சென்ற போது பின்னாலிருந்து சுடப்பட்டு இறந்தான். அதைப் புலிகளே திட்டமிட்டுச் செய்ததாக தகவல்கள் கசிந்தன. அதற்கான காரணம், ராஜினியை செங்கதிர் மூலமாக புலிகள் கொலை செய்ததால், பின்னொரு காலத்தில் அவன் மூலமாக அந்த படுபாதகச் செயல் அம்பலமாகலாம் என்பதினாலேயே என, புலிகளில் சிலரே பேசிக் கொண்டனர்.

புலிகள் எதிர்பார்த்தது போலவே செங்கதிருக்கும் புலிகளின் தலைமைக்கும் சில முரண்பாடுகள் எழுந்ததாகவும், அம்முரண்பாடு அவர் தாழ்த்தப்பட்ட சமூகத்தவர் என்பதனால் ஏற்பட்ட புறக்கணிப்புக்

காரணமாகவே எழுந்ததாகவும்கூட கூறப்பட்டது. அதன் காரணமாகவே அவரது மரணத்துக்கு துக்கம் விசாரிக்க அவரது கன்பொன்லை வீட்டுக்குச் சென்ற அப்போதைய புலிகளின் பிரதித் தலைவர் மாத்தையாவை நோக்கி "அவனை நீங்களே கொலை செய்துபோட்டு, துக்கம் விசாரிக்க வாறீங்களோடா?" என அவரது சகோதரி கூச்சலிட்ட சம்பவமும் நிகழ்ந்தது. அதை ஊர்ஜிதப்படுத்துவது போல, பின்னர் நெல்லியடிச் சந்தியில் வைக்கப்பட்டிருந்த புலிகளின் மாவீரர் படங்களின் வரிசையில் இருந்த செங்கதிரின் படத்தைத் திடீரென புலிகள் ஒருநாள் அகற்றி விட்டனர்.

'சுட்டவனைச் சுட்டு' என்பதற்கிணங்க, தடயங்களை அழிப்பதில் புலிகள் கைதேர்ந்தவர்கள். இதற்கு இன்னொரு உதாரணமும் உண்டு. ராதா என்பவன் புலிகளின் மன்னார் மாவட்டத் தளபதியாக இருந்தவன். பின்னர் யாழ்ப்பாணத்துக்கு மாற்றப்பட்டான். இவன் புலிகளின் பிரதித் தலைவராக இருந்த மாத்தையாவின் ஆள். மாத்தையாவுக்கும், புலிகளின் யாழ் மாவட்டத் தளபதியாக இருந்த கிட்டுவுக்கும் மோதல் ஏற்பட்ட பின்னர், கிட்டு வழமையாகச் சென்று வரும் யாழ்ப்பாணம் மூன்றாம் குறுக்குத் தெருவிலிருந்த தனது காதலியின் வீட்டிலிருந்து ஒரு இரவு திரும்பிக் கொண்டிருக்கும்போது, அவனது வாகனம் மீது கைக்குண்டு வீசப்பட்டு, அவன் ஒரு காலை இழக்க வேண்டி ஏற்பட்டது.

அன்றைய தினம் அந்தப் பகுதியில் ராதாவின் குழுவினரே பாதுகாப்பு கடமையில் இருந்ததாகவும், மாத்தையாவின் ஏற்பாட்டில் அக்குழுவே கிட்டு மீது அந்தத் தாக்குதலை நடாத்தியதாகவும், புலிகளுக்குள் இருந்து சில தகவல்கள் கசிந்தன. இது நடந்து சில நாட்களின் பின்னர், ராதா பலாலி இராணுவ முகாமுக்கு அருகிலிருந்த புலிகளின் முன்னரங்க நிலைகளைப் பார்வையிடச் சென்றபோது, பின்னால் இருந்து சுடப்பட்டு 'வீரச்சாவை'த் தழுவினான் (அவன் எனது நண்பனொருவனின் நெருங்கிய உறவினன் என்பதால், அவனது உடல் வைக்கப்பட்டிருந்த யாழ்.பல்கலைக்கழகத்துக்கு முன்னாலிருந்த புலிகளின் தலைமைக் காரியாலயத்துக்கு நான் சென்றபோது, அங்கு பிரபாகரனையும் காண முடிந்தது). புலிகளின் முன்னரங்க நிலைகளுக்குப் பின்னால், மாற்று இயக்கத்தவர்களோ அல்லது பொதுமக்களோ இருந்திருக்க வாய்ப்பில்லை. எனவே இந்தக் கொலையும் புலிகளின் உள்வீட்டு வேலைதான் என, அதாவது தடயங்களை அழிக்க நடாத்தப்பட்டது என, பின்னர் புலிகளின் ஒரு முக்கியஸ்தரின் வாயாலேயே அறிந்து கொண்டேன்.

ராஜினியின் மரண ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டமை புலிகளுக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாக இருந்தது. அவரது மரணச்; சடங்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது எனது வாழ்வில் மறக்க முடியாத சம்பவம். ராஜினி சுடப்பட்ட சம்பவம் கேள்விப்பட்டதும் உடனடியாகவே அவரது வீட்டுக்கு விரைந்தேன். அதற்கு முன்னர் பல தடவைகள் அங்கு சென்றிருந்தாலும், அன்று சென்றபோது அங்கு கண்ட காட்சி எனது இதயத்தை வெடித்துச் சிதற வைத்தது. காரணம் அவரது இரு சின்னஞ்சிறு மகள்களும் சோகமே உருவாக வாடி வதங்கிப் போயிருந்தனர்.

நான் அங்கு போனபோது, சிறீதரன், சித்திரலேகா மௌனகுரு உட்படப் பலர் சோகமே உருவாக நின்றிருந்தனர். என்னைக் கண்டதும் ஒருவர் "இந்த ஈ.பி.ஆர்.எல்.எப் ராஸ்கல்ஸ் இப்படிச் செய்து போட்டாங்கள்" எனச் சத்தமிட்டார். அதாவது அந்த நேரத்தில் இந்திய அமைதிப்படையுடன் சேர்ந்து செயல்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப் தான் அந்தக் கொலையைச் செய்து போட்டார்கள் என்பதுதான் அவரது கூச்சலுக்குக் காரணம். புலிகளும் பொதுமக்கள் அவ்வாறு கருத வேண்டும் என நன்கு திட்டமிட்டே அந்தக் கொலையைச் செய்ருந்தனர். அந்த குறிப்பிட்ட நபர் என்னைக் கண்டதும் அப்வாறு கூச்சலிட்டதற்கான காரணத்தைப் பின்னர் அறிந்தேன். ஒரு காரணம், எமது கட்சியில் முக்கியஸ்தராக இருந்த தோழர் வீ.ஏ.கந்தசாமி ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்துடன் இணைந்து வேலை செய்ததால், நானும் அவ்வாறான ஒருவன் என்ற அனுமானம். மற்றது, குறிப்பிட்ட சில விடயங்களில் ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கத்தின் முற்போக்குத் தன்மை காரணமாக, அதனுடன் எமக்கு இருந்த நட்புறவு நிலை. ஆனால் பின்னர் புலிகள்தான் அந்தக் கொவையை நிகழ்த்தினர் என்பது சந்தேகமற நிரூபணமாகிவிட்டது.

அந்தச் சம்பவத்தில் மறக்க முடியாத, நெஞ்சை விட்டகலாத, இன்றும் என் மனதை வாட்டுகிற விடயம் ராஜினியின் அந்த இரு சின்னஞ்சிறு குழந்தைகளின் கண்களில் நிறைந்திருந்த தாய்மையின் ஏக்கம். மரண ஊர்வலத்தின் இறுதியில் அவரது உடல் நல்லூர் முத்திரைச் சந்தை செம்மணி வீதியிலிருந்த அவர்களது குடும்ப மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட பின்னர், அவரது இரு குழந்தைகளும் அவர் புதைக்கப்பட்டிருந்த மண் மேட்டைச் சுற்றிச் சுற்றி வந்து, 'அம்மா மீண்டும் எழுந்து வரமாட்டாவா?' என்ற ஏக்கத்துடன் நின்ற காட்சி மனதை ஒருகணம் உலுக்கியது. ராஜினியின் கணவர் தயாபால அரச படைகளின் தேடுதலுக்கு அஞ்சி தலைமறைவாக இருந்த காலத்தில், தனது இரு குழந்தைகளையும் ஒரு குறையும் வைக்காது வளர்த்த அந்தக் குழந்தைகளின் அம்மாவை, என்றென்றைக்கும் திரும்பி வர முடியாதபடி புலி பாசிஸ்ட்டுகள் அழித்துவிட்டார்கள். நான் அங்கிருந்து விடைபெறும் போது ராஜினியின் கணவர் தயாபாலவின் கைகளைப் பிடித்த போது, அவரது இதயத் துடிப்பை என்னால் உணர முடிந்தது.

தாயை இழந்தாலும் உயிர் தப்பி வாழ்ந்து கொண்டிருக்கும் ராஜினியின் குழந்தைகளை இன்று நினைக்கையில், அவ்வாறு உயிர்வாழச் சந்தர்ப்பம் கொடுக்காமல் பூவும் பிஞ்சுமாக புலிகளால் யுத்த முனைக்கு பலவந்தப்படுத்திப் பறித்துச்; செல்லப்பட்டு, தமது அதிகார வெறி பிடித்த யுத்தத்துக்காக புலிகளால்; பலியாக்கப்பட்ட ஆயிரக்கணக்கான சிறுவர்களினதும் சிறுமிகளினதும் சோகக் கதறல்கள் நெஞ்சைப் பிளக்க வைக்கின்றன.

அநியாயமாக கொல்லப்பட்ட பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் என்ற சிறுவனுக்காக நியாயமாகக் கண்ணீர் வடிக்கும் 'நாகரீக' உலகு, பிரபாகரனால் யுத்த முனைக்குப் பிடித்துச் செல்லப்பட்டு அநியாயமாக் கொல்லப்பட்ட அந்த முகம் தெரியாத ஆயிரக்கணக்கான ஏழைச் சிறுவர்களுக்காகவும், கண்ணீர் வடிக்காதா?

தொடரும்

முன்னைய பதிவுகள்